**சுருக்கம்**

வனம் – திண்டுக்கல் மாவட்டம் – கொடைக்கானல் வட்டம் – எண்.7, அடுக்கம் கிராமம் – அடுக்கம் வன வட்டாரம்–III – நில அளவை எண்.125/1–ல் உள்ள 102.42.5 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 4–ன் கீழ் அறிவிக்கை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம். 13) துறை**

**அரசாணை (நிலை) எண்.126**

**நாள்: 07.08.2023**
**சோபகிருது, ஆடி– 22**
**திருவள்ளுவர் ஆண்டு–2054**

**படிக்க:**

முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.டிஎஸ்2/9279/2019, நாள். 03.02.2022.

=======

**ஆணை :**

மேலே படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், எண்.7, அடுக்கம் கிராமம், அடுக்கம் வன வட்டாரம்–III, நில அளவை எண்.125/1–ல் உள்ள 102.42.5 எக்டர் நிலத்தினை தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 4–ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 30.08.2023–ல் ஆங்கிலத்திலும், திண்டுக்கல் மாவட்டம் அரசிதழ் நாள் 13.09.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 30.08.2023–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அரசிடமிருந்து அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன் அதனை தமிழில் திண்டுக்கல் மாவட்ட அரசிதழில் வெளியிடுமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளருக்கு அறிவுறுத்துமாறு அரசு மைய அச்சக பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய மற்றும் கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

..2.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை – 625 007.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையர்,
நில நிர்வாகம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல்.
தலைமை வனப்பாதுகாவலர், திண்டுக்கல்.
மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர்,
கொடைக்கானல்.
வன நிர்ணய அலுவலர், திண்டுக்கல்.

**நகல்:–**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD–IV) துறை,
சென்னை–9.
சட்டத் (Opinion) துறை, சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை,
சென்னை–9.
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

7/8/2023
**பிரிவு அலுவலர்**
07/08/2023

**அரசு ஆணை (நிலை) எண்.126**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.13) துறை,**

**நாள். 07.08.2023–ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1. | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை –9. | 2 | 2 |
| 2. | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–32. | 3 | 3 |
| 3. | மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல். | 2 | 2 |
| 4. | தலைமை வனப்பாதுகாவலர் திண்டுக்கல். | 5 | 5 |
| 5. | மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர் கொடைக்கானல். | 12 | 12 |
| 6. | வன நிர்ணய அலுவலர், திண்டுக்கல். | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

//உண்மை நகல்//

7/8/2023
**பிரிவு அலுவலர்**
07/08/2023

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை – I.**

தமிழ்நாடு 1882–ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4–ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் கீழே உள்ள விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைக்குட்பட்டுள்ள நிலப்பகுதியை காப்பு வனமாக அமைக்கக் கருதியிருப்பதாக இதனால் அறிவிக்கிறார். மேலும், அந்நிலப் பகுதியைப் பொறுத்தவரையில், மேற்சொன்ன பிரிவின்(c) பகுதியின் கீழ் அதிகாரங்களைச் செலுத்த திண்டுக்கல் தனி வட்டாட்சியரை (வன நிர்ணயம்) அலுவலால் வன நிர்ணய அலுவலராக இதனால் நியமிக்கிறார்.

**விவர அட்டவணை.**

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | திண்டுக்கல் |
| 2. | வட்டத்தின் பெயர் | : | கொடைக்கானல் |
| 3. | கிராமத்தின் எண் மற்றும் பெயர் | : | 7, அடுக்கம் |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | அடுக்கம் வன வட்டாரம் – III |
| 5. | வன வட்டாரத்தின் நில அளவை எண் | : | 125/1 |
| 6. | வன வட்டாரத்தின் பரப்பளவு | : | 102.42.5 எக்டர் |

**நாற்புற எல்லைகள்.**

வடக்கு.– இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 116, 115 மற்றும் 125/1 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பில் தொடங்கி எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்.116–ன் தென்கிழக்கு எல்லை வழியாகவும் மற்றும் நில அளவை எண்.117–ன் தென்மேற்கு மற்றும் தெற்கு எல்லை வழியாக பொதுவாக வடகிழக்கு, தென்கிழக்கு மற்றும் கிழக்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 123 மற்றும் 124 ஆகியவற்றின் தென்மேற்கு, மேற்கு, தெற்கு மற்றும் கிழக்கு எல்லை வழியாக பொதுவாக தென்கிழக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் வடக்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 122 மற்றும் 121 ஆகியவற்றின் தென்மேற்கு எல்லை வழியாக வடகிழக்கு நோக்கிச் சென்று எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 121, 125/1 மற்றும் எண்.9, பண்ணைக்காடு கிராமம் ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பை அடைகிறது.

கிழக்கு.– பின்னர் இந்தஎல்லையானது எண்.9, பண்ணைக்காடு கிராமம் மற்றும் எண்.7, அடுக்கம் கிராமம் (நில அளவை எண்.125/1–ல்) ஆகியவற்றின் பொது எல்லை வழியாக பொதுவாக தெற்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த

எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 150, 149 மற்றும் 148 ஆகியவற்றின் வடக்கு மற்றும் மேற்கு எல்லை வழியாக பொதுவாக மேற்கு மற்றும் தெற்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இவ்வெல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 129, 128, 127 மற்றும் 126 ஆகியவற்றின் வடகிழக்கு மற்றும் வடக்கு எல்லை வழியாகவும் மற்றும் நில அளவை எண்கள் 126, 133, 134, 135 ஆகியவற்றின் மேற்கு எல்லை வழியாகவும் மற்றும் நில அளவை எண்.136–ன் வடமேற்கு மற்றும் தென்கிழக்கு எல்லை வழியாகவும் மற்றும் நில அளவை எண்.137–ன் தெற்கு எல்லை வழியாகவும் பொதுவாக வடமேற்கு, மேற்கு, தெற்கு மற்றும் தென்கிழக்கு நோக்கிச் சென்று எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 137, 138, 340 மற்றும் 125/1 ஆகியவை சந்திக்கும் சந்திப்பை அடைகிறது.

<u>தெற்கு</u>.– பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள். 340, 399, 342, 341, மற்றும் 343 ஆகியவற்றின் வடக்கு மற்றும் வடகிழக்கு எல்லை வழியாகவும் மற்றும் நில அளவை எண்கள் 344, 345 மற்றும் 346 ஆகியவற்றின் வடமேற்கு மற்றும் மேற்கு எல்லை வழியாகவும் பொதுவாக மேற்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு மற்றும் தெற்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 355, 358, 359, 357, 362, 361, 364 மற்றும் 365 ஆகியவற்றின் வடக்கு மற்றும் மேற்கு எல்லை வழியாக பொதுவாக வடமேற்கு, தென்மேற்கு, வடமேற்கு, மேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு மற்றும் மேற்கு நோக்கிச் சென்று எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 365, 757 மற்றும் 125/13 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பை அடைகிறது.

<u>மேற்கு</u>.– பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 757 மற்றும் 102 ஆகியவற்றின் கிழக்கு எல்லை வழியாக பொதுவாக வடக்கு மற்றும் வடமேற்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 102 மற்றும் 103 ஆகியவற்றின் கிழக்கு மற்றும் வடகிழக்கு எல்லை வழியாக பொதுவாக கிழக்கு மற்றும் வடமேற்கு நோக்கி செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்.100–ன் தென்மேற்கு எல்லை வழியாக பொதுவாக வடகிழக்கு நோக்கிச் செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது அடுக்கம் காப்பு வனத்தின் எல்லை வழியாக தென்கிழக்கு, கிழக்கு மற்றும் வடக்கு நோக்கி செல்கிறது. பின்னர் இந்த எல்லையானது எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 100, 104, 105, 106, 107, 110, 111, 112 மற்றும் 115 ஆகியவற்றின் கிழக்கு, வடகிழக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு எல்லை வழியாக பொதுவாக வடகிழக்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் வடகிழக்கு நோக்கிச் சென்று தொடக்கப் புள்ளியை அடைகிறது.

**<u>அடைவுப் பகுதிகள்</u>:** இவ்வன வட்டாரத்தின் 13 இடங்களில் அமைந்துள்ள பட்டா மற்றும் அரசு நிலங்களாக உள்ள எண்.7, அடுக்கம் கிராம நில அளவை எண்கள் 125/2, 125/3, 125/4, 125/5, 125/6, 125/7, 125/8, 125/9, 125/10, 125/11, 125/12, மற்றும் 125/14-ஐ இவ்வன வட்டாரத்தின் அடைவுப் பகுதியாக இருக்கும் வகையில் அறிவிக்கையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. தீர்வு காணும் நடவடிக்கையின் போது, இந்த அடைவுப் பகுதிகளுக்கான அணுகுபாதை குறித்து முடிவெடுக்கப்படும்.

**<u>அறிவிக்கை-II.</u>**

தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 4-ஆம் பிரிவின் கடைசிப் பத்தியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்க கருதியுள்ள அடுக்கம் வன வட்டாரம்-III-இன் நிலம் தொடர்பாக, மேற்சொன்னச் சட்டத்தின் II-ஆம் அத்தியாயத்தின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள விசாரணையில் அரசு சார்பில் கலந்து கொள்ள கொடைக்கானல் வன உயிரின சரணாலய மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளரை அலுவலால் இதனால் நியமிக்கிறார்.

**<u>அறிவிக்கை – III.</u>**

தமிழ்நாடு 1882-ஆம் ஆண்டு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1882) 14-ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், காப்பு வனமாக அமைக்க கருதியுள்ள அடுக்கம் வன வட்டாரம்-III-இன் நிலம் தொடர்பாக, மேற்சொன்ன சட்டத்தின் 11, 12 மற்றும் 13 ஆம் பிரிவுகளின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கெதிராக மேல்முறையீடுகள் எவையேனும் இருக்குமாயின் அவற்றை விசாரணை செய்வதற்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரை (பொது) அலுவலால் இதனால் நியமிக்கிறார்.

**சுப்ரியா ஸாஹூ**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

**பிரிவு அலுவலர்**